O.S. 227/2022 நாள்: 25-03-2025

PW 2 பாரதி த/பெ. முருகன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

1. நான் 9 ஆம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். வாதி என் ஊரை சேர்ந்தவர். சம்பவம் நடந்த நாளன்று நான் வாதியிடம் வேலை செய்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். தாவா சொத்து அமைந்திருக்கும் ஊரில் தான் நான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய வசிப்பிடத்தை காண்பிப்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து அமைந்திருக்கும் ஊரில் எனக்கு சொந்தமான சொத்துகள் ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது.

2. தாவா சொத்தின் புல எண் மற்றும் விஸ்தீர்ணம் என்னவென்று கேட்டால் 139/6 , 50 சென்ட் ஆகும். மொத்த விஸ்தீர்ணமான 50 சென்ட்டும் வாதியிடம் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருக்கும் அனைத்து விபரங்களும் யார் கூறினார்கள் என்று கேட்டால் எனக்கு தெரிந்த விபரங்களை நான் கூறினேன். தாவா சொத்து 2 கொல்லையாக அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்பு நான் வாதியிடம் வேலை செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து நான்கெல்லைகளில் அமைந்திருக்கும் மற்ற சொத்துகளின் புலன்எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் புலன் எண் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அந்த ஊரில் எனக்கு சொத்து இருப்பதால் அதன் மூலம் எனக்கு தெரியும். என்னுடைய சொத்தின் புலன்எண் என்னவென்றால் 170/1 ஆகும்.

3. தாவா சொத்தின் புலன் எண் என்னவென்று எனக்கு தெரிவதற்கு எனக்கு வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் நான்கெல்லைகளில் யார்யார் வசிக்கிறார்கள் என்றால் கிழக்கில் கணேசநாடார், மேற்கில் சம்பந்த முதலியார், வடக்கில் வாய்க்கால் மற்றும் தெற்கில் ரோடு அமைந்துள்ளது. தாவா சொத்தில் வீடு ஏதேனும் அமைந்துள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் வேலி அமைப்பதற்கு என்னுடன் யார் வந்தார் என்றால் வாதி மற்றும் வேலாயுதம் வந்தார்கள். எந்த தேதியில் வேலி அடைப்பதற்கு சென்றேன் என்றால் 19.12. 2021. வேலி

அமைப்பதற்கு யார் தடை செய்தார்கள் ரமேஷ் தடுத்தார். தாவா சொத்து குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும் தாவா சொத்தில் பிரதிவாதிதான் வசித்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் கூறிய தேதியில் வேலி எதுவும் அமைக்கவில்லை என்றும் அதை 1 ஆம் பிரதிவாதி தடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதால் என் சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து அமைந்திருக்கும் ஊரில் நான் வசிக்கவில்லை என்பதால் தான் என் சொத்துக்குரிய ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.